# பெற்றோருக்கான வாராந்தத் தகவல்கள்!

*கிழமை இல. 43-2022*

## நிர்வாக உறுப்பினர்களில் ஒரு சிறிய மாற்றம்.

கலைப்பொறுப்பாளராகக் கடமையாற்றிவந்த திரு. துராதரன் கணேசமூர்த்தி அவர்கள் தனது தனிப்பட்ட சில காரணங்களால் நிர்வாகத்திலிருந்து விலகியுள்ளார். பதிலாக உதவி கலை மற்றும் உதவி அலுவலகப் பொறுப்பாளராகப் பணிபுரியும் செல்வி. காத்தியா மோகன்ராஜ் அவர்கள் கலைப்பொறுப்பாளராகவும் உதவி அலுவலகப் பொறுப்பாளராகவும் பணிபுரிய ஒப்புதல் தந்துள்ளார்.

## கல்வி - 29.10.2022 - காலை வணக்கம் *மாதாந்தம் மாணவர்கள் ஆசிரியர்கள் ஒன்றுகூடல்*

அனைத்து மாணவர்களையும் மேல்கட்டிடத்தில் (சந்திப்புகள் நடைபெறும் இடத்திற்கு) காலை 08:55 மணியளவில் ஒன்றுகூடும் வண்ணம் அறியத்தருகின்றோம். காலை வணக்கம், பாடசாலைக்கீதம், பிறந்தநாள் வாழ்த்து மற்றும் சில தகவல்களுடன் பாடசாலை ஆரம்பமாகும் என அறியத்தருகின்றோம். இம்மாதம் இந்நிகழ்வு **10ஆம் வகுப்பு ஆசிரியரின்** தலைமையில் இடம்பெறும்.

*பாடசாலை நேரம் :*

| | |
|---|---|
| *மழலையர் - சிறுவர்நிலை* | *09:00 - 12:00* |
| *வகுப்பு 1 - வகுப்பு 10* | *09:00 - 12:30* |
| *வகுப்பு 11 -* | *09:00 - 12:00* |
| *இடைவேளை -* | *10:30 - 11:00* |
| *கலை வகுப்புகள்* | *வழமைபோல்..* |

*இதில் மேலதிக பயிற்சி மற்றும் நேரங்கள் தேவைப்படின் ஆசிரியர்கள் பெற்றோருடன் கலந்தாலோசித்து முடிவெடுப்பார்கள்.*

## மாவீரர் நினைவாக நடாத்தப்படும் ஓவியப்போட்டி 2022

போட்டிக்கான விதிமுறைகள், தலைப்புகள் மற்றும் பிரிவுகளின் விபரம் இவ்வாராந்தத் தகவலுடன் இணைக்கப்பட்டுள்ளது.

லோறன்ஸ்கூக் வளாகத்தில் நடைபெறும் ஓவியப்போட்டிக்கான

திகதி: 12.11.2022

இடம்: **ஓசன் பாடசாலை**

நேரம்: **பாடசாலை நேரம்**

*பங்குகொள்ளவிரும்பும் மாணவர்கள் தங்கள் வகுப்பாசிரியர்களிடம் பெயர்விபரங்களைப் பதிவுசெய்யவும். வரையப்பட்ட போட்டித்தாள்களை அன்னையிடம் வளாக நிர்வாகம் அனுப்பிவைக்கும்.*

***முக்கிய கவனம்!!!!***

*மாணவர்கள் வெளியில் பயன்படுத்தும் காலணிகளைக் கழற்றி கட்டிடத்தினுள் பயன்படுத்தக்கூடிய காலணிகளையும் கொண்டுவருதல் மிக முக்கியம்.*

**கலை - 29.10.2022 சனிக்கிழமை**

வழமைபோல் வழங்கப்பட்ட நேரத்தில் நடைபெறும். மாற்றங்கள் இருப்பின் கலை ஆசிரியர்கள் அறியத்தருவார்கள்.

சிற்றுண்டிச்சாலை இவ்வாரம் வழமைபோல் இயங்குநிலையில் இருக்கும்.

**நிதி**

2023 இல் தவணைக்கட்டணங்கள் 100குரோனர் விகிதம் உயர்வடைகின்றது என்பதனை அறியத்தருகின்றோம்.

**வளாகம் சார்ந்த முக்கிய நிகழ்வுகள்**

ஆசிரியர்களுக்கான பட்டறை - 05.11.2022
அன்னையின் தேசிய ஆண்டுக்கூட்டம் - 13.11.2022 - பரிந்துரைகள் 30.10.2022
நத்தார் விழா - 03.12.2022
20வது ஆண்டுவிழா - 28.01.2023

**குறிப்பு:**

அன்னையின் ஆண்டுக்கூட்டத்திற்கு எமது வளாகம் சார்பாக எடுத்துச்செல்லவேண்டிய விடையங்கள் தங்களிடம் இருப்பின் எமக்கு 29.10.2022 நேரம் 18:00 இற்கு முன்னதாக வளாக மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும். பயன்படும் விடையங்களை நாம் பரிந்துரைகளாக எடுத்துச்செல்லலாம்.

***எமது வளாக நிர்வாகச் செயற்பாடுகளில் அல்லது எம்மால் வழங்கப்படும் தகவல்களில் தெளிவின்மை அல்லது சந்தேகங்கள் இருப்பின் வளாகப்பொறுப்பாளருடன் நேரடியாகத் தொடர்புகொள்வதன் மூலம் தேவையற்ற ஊகங்களைத் தவிர்த்துக்கொள்ளலாம்.***

<u>நன்றி!</u>

<u>நிர்வாகம்</u>
அன்னை லோறன்ஸ்கூக் வளாகம்

தமிழை வளர்க்கப்
பணிபுரிவோம்!

# மாவீரர் நினைவாக நடத்தப்படும் ஓவியப்போட்டி. 2022

- ஓவியப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு 1மணிநேரம் வழங்கப்படும்.
- பாடசாலை நடைபெறும்போது வகுப்பு நேரத்தில் போட்டி நடைபெறும்.
- ஓவியத்தாள் தவிர்ந்த தேவையான உபகரணங்களை மாணவர்கள் கொண்டுவருதல் வேண்டும்.
- வரையப்போகும் ஓவியத்தை வீட்டில் பயிற்சி செய்துகொள்ளலாம்.
- பயிற்சி செய்த ஓவியத்தாள் போட்டி நடைபெறும்போது வகுப்பறைக்குள் கொண்டுவர அனுமதிக்கப்பட மாட்டாது.
- மாணவர்களுக்கான சுட்டிலங்கங்களை வளாகங்கள் போட்டித்தாளின் பின்புறத்தில் எழுதிவிடுதல் வேண்டும்.
- சுட்டிலக்கம் போட்டியாளர் பெயர் ஆகிய விவரங்களை பிறிதொரு தாளில் எழுதி ஓவியத்தாள்கள் அனுப்பும் போது இணைத்து எமக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.
- ஓவியத்தாளை முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். (வரைந்து, வர்ணம் தீட்டியிருத்தல் வேண்டும்)
- ஒவ்வொரு பிரிவுகளுக்கும் வழங்கப்பட்டுள்ள தலைப்புக்களில் ஒன்றை மட்டுமே போட்டியாளர்கள் தெரிவு செய்து வரைந்து, வர்ணம்தீட்டுதல் வேண்டும்.
- காரத்திகை மாதம் 15ம் திகதிக்கு முன்னதாக அன்னை தலைமை நிருவாகத்தின் முகவரிக்கு ஓவியத்தாள்கள் அனுப்பிவைத்தல் வேண்டும்.
- வளாகங்களின் விருப்பிற்கமைவாக போட்டிகள் (5ம்,6ம் ) (7ம்,8ம்) (9ம்,10ம்) (11ம்,12ம்) வகுப்பு என நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

**போட்டிக்காக பரிந்துரைக்கப்பட்ட தலைப்புகளும் பிரிவுகளும்.**

- **பிரிவு 1 (5ம்,6ம் வகுப்பு )**

(1) தமிழீழ தேசியசின்னங்களில் ஒன்று அல்லது

(2) நடுகல் வழிபாடு

- பிரிவு 2 (7ம்,8ம் வகுப்பு )

(1) மாவீரர் துயிலுமில்லம் அல்லது

(2) தமிழீழ வரைபடம். (தமிழரின் பூர்வீக பிரதேசங்களின பெயர்களுடன்)

- பிரிவு 3 (9ம்,10ம் வகுப்பு )

(1) நல்லூரில் அமைந்திருந்த தியாகதீபம் திலீபனின் நினைவுத்தூபி அல்லது

(2) ஈழத்தமிழர் நில அபகரிப்பும் திட்டமிட்ட குடியேற்றங்களும்.

- பிரிவு 4 (11ம்,12ம் வகுப்பு )

(1) முள்ளிவாய்க்கால் பேரவலம் அல்லது

(2) தமிழீழ நிழல் அரசும் உட்கட்டுமானங்களும்

அன்னை 15.10.2022.